மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வீடு கட்டுகிற பொறுப்பு ஊராட்சி ஒன்றியம் மூலமாகத்தான் கட்டப்படுகிறது. பாதைகள் போடுவது எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களால்தான் போடப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் கவனிக்கவேண்டு மென்று சொன்னாலும் அதற்கு என்று நிதி ஒதுக்கிய பிறகு தான் அவர்கள் அதைச் செய்ய வேண்டும். அரசாங்கம் எப்படி நிதி ஒதுக்குவது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது.

வெள்ள நேரத்தின் போது அளிக்கப்பெற்ற துணிகள்.

*வினா எண் 261—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வெள்ள நிவாரணத்திற்கு அளிக்கப் பெற்ற துணிகள் திருச்சியில் கடை வீதியில் விற்கப்பட்டதாக புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(ஆ) இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்; இந்த வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தரப்பட்ட வேஷ்டியின் மதிப்பு எவ்வளவு ? புடவைகள் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள், அதன் மதிப்பு எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வேஷ்டி, சேலை சேர்ந்து ரூ. 32லிருந்து ரூ. 35, ரூ. 40 வரை போயிருக்கும்.

பரிசுபெற்ற திரைப்படங்களுக்கு வரி விலக்கு.

*வினா எண் 262—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரிசு பெற்ற திரைப்படங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி மாநில அரசுக்கு மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனின் அதன் விபரம் யாது?